# பொருளடக்கம் Contents


ஆயர் மடல் ... ....2
திருமறை தியானப்பகுதி... ....3
பெண்கள் ஐக்கிய சங்கம் ....5
செயலரிடமிருந்து... ....6
மிஷனரி பணித்தளச்செய்திகள் ....7
திட்டங்கள் Projects ....8
கட்டுரைகள் ....9
சிறுவர் பகுதி Children's Place ....13
Children's Quiz ....15
Children's Quiz Correct Answers: ....17
Kids Coloring ....19
வேத வினா விடை போட்டி – செப்டம்பர்-2018 ....20
கடந்த மாதத்திற்கான விடைகள் எழுதியவர்கள் ....21
பிறந்த நாள் மற்றும் திருமண நாள் ஆசரிப்போர் ....21
தினசரி வேதவாசிப்பு ....23
திருசபை ஆராதனை நேரம் ....24
ஆயர் இல்லத்தில் நடைபெறும் ஊழியங்கள் ....24


"The more you read bible, the more you'll love its Author"

# <u>ஆயர் மடல்...</u>

அன்புக்குரியவர்களே,

*Welcome back from Vacation!*

புத்துணர்ச்சியோடும் புதிய பெலத்தோடும் புதிய மாதத்தில் அடியெடுத்து வைத்துள்ள திருச்சபை மக்களாகிய உங்களை இயேசுவின் நாமத்தில் வாழ்த்துகிறேன்.

பலர் விடுமுறைக்கு சென்றிருந்தாலும், ஒவ்வொரு ஓய்வு நாள் ஆராதனையிலும் கர்த்தர் புதிய, புதிய ஆத்துமாக்களை பங்குகொள்ளச்செய்ததற்காக கர்த்தரை ஸ்தோத்தரிப்போம்.

வருகிற அக்டோபர் 26ல் நடைபெறவுள்ள வருடாந்திர அறுவடை ஸ்தோத்திர பண்டிகையை கொண்டாட ஒவ்வொருவரும் ஆயத்தமாக வேண்டும். அனுதின ஜெபத்தோடும், உங்கள் உடன் ஊழியமும் அவசியமாக இருக்கிறது. காரணம் இங்குள்ள பல CSI திருச்சபை ஊழியங்களில் ஒருவருக்கொருவர் ஒத்தாசையாக உதவிசெய்வது, தாங்குவது அவசியமாக இருக்கிறது. இந்த திருச்சபையின் அனைத்து ஊழியங்களில் உற்சாகத்தோடு பங்குபெறுங்கள்.

கர்த்தர் உங்கள் ஒவ்வொரு வரையும் ஆசீர்வதிப்பாராக.

இப்படிக்கு,
**உங்கள் ஆயர்,**
***Rev. M. Christopher Rajendran.***

# திருமறை தியானப்பகுதி...
# *Meditation*

*அன்புக்குரியவர்களே,*

*தாகமுள்ளவன் மேல் தண்ணீரையும், வறண்ட நிலத்தின்மேல் ஆறுகளையும் ஊற்றுவேன்; உன் சந்ததியின்மேல் என் ஆவியையும், உன் சந்தானத்தின்மேல் என் ஆசீர்வாதத்தையும் ஊற்றுவேன். (ஏசாயா 44:3).*

*பழைய ஏற்பாட்டில் இஸ்ரவேல் மக்களுக்கு கர்த்தர் கொடுத்த வாக்குத்தத்தத்தை பெந்தகொஸ்தே நாளிலே நிறைவேற்றினார். இந்த வாக்குத்தத்தத்தை இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிற ஒவ்வொரு விசுவாசியும் தனக்கு சொந்தமாக்கிக்கொள்ளமுடியும் என்று இயேசு தெளிவாக (யோவான் 7:38)ல் சொல்கிறார். கர்த்தராகிய இயேசு கிறிஸ்து சொல்லுகிறபடி நாம் அனைவரும் இந்த ஜீவத்தண்ணீருள்ளநதிகளான பரிசுத்த ஆவியானவர் என்ற நதியை நம் உள்ளத்திலே கொண்டிருக்கிறோம்.*

*இந்த சத்தியத்தை யோவான் 4ம் அதிகாரத்திலே இயேசு சமாரியப்பெண்ணிடத்தில் தெளிவாக விளக்கிச்சொல்கிறார். இயேசுவிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் ஒருக்காலும் தாகமடையான். காரணத்தையும் அவரே விளக்குகிறார், இந்த தண்ணீரை குடிக்கிறவனுக்கு மறுபடியும் தாகமுண்டாகும். நான் கொடுக்கும் தண்ணீரைக்குடிக்கிறவனுக்கோ ஒருக்காலும் தாகமுண்டாகாது; நான் அவனுக்குக்கொடுக்கும் தண்ணீர் அவனுக்குள்ளே நித்திய ஜீவகாலமாய் ஊறுகிற நீரூற்றாயிருக்கும். இதைக்கேட்ட சமாரியப்பெண் தனக்கு இனி தாகமே எடுக்காதபடி அந்த தண்ணீரை தரவேண்டும் என்று ஒட்டுமொத்தமனிதசமுதாயத்தின் பிரதிநிதியாகக் கேட்கிறாள். **Her request revealed the pathetic plight of Humanity and also their desperate need of the Living Water**. அந்த ஜீவத்தண்ணீருள்ளநதிகளான நீரூற்று இயேசுவினிடத்தில் இலவசமாக கிடைக்கும்.*

அதற்குமுன்பு தன்னுடைய பாவத்தை உணர்ந்து மனந்திரும்ப வேண்டும் என்று இயேசு நேரடியாகக் கூறாமல், நீ போய், உன் புருஷனை இங்கே அழைத்துக்கொண்டுவா என்கிறார். அவள் தனக்கு ஒரு புருஷனும் இல்லை என்கிறாள். அதற்கு இயேசு நீ சொல்வது சரிதான், ஐந்து புருஷர் உனக்கிருந்தார்கள், இப்பொழுதிருக்கிறவன் உனக்கு புருஷனல்ல, இதை உள்ளபடியே சொன்னாய் என்று சொல்லி அவளுடைய பாவங்களை, அவளுடைய அவல நிலையை வெளிப்படுத்தியவுடன், தனது பாவங்களை இயேசுவின் பாதத்தில் நருங்குண்ட நெஞ்சத்தோடு அறிக்கையிட்டு, கண்ணீரோடு மனந்திரும்பியிருந்தாள் ? அவள் இனி தாகமே எடுக்காதபடி ஜீவத்தண்ணீருள்ள நதிகளான பரிசுத்த ஆவியானவரை உடனே இயேசுவிடம் பெற்றிருந்திருப்பாள்.

அவளோ உடனே இந்த நற்செய்தியை தன் ஊரிலுள்ள மக்களுக்கு அறிவிக்க ஓடினாள். இயேசுவின் உபதேசத்தை இரண்டு நாட்கள் கேட்டபின் அந்த சமாரியர் இயேசு மெய்யாய்க் கிறிஸ்துவாகிய உலகரட்சகர் என்று அறிந்து விசுவாசிக்கிறோம் என்றார்கள். ஒரு வேளை அந்த பாவியான சமாரியப்பெண்ணும் மனந்திரும்பி விசுவாசித்து, இனி தாகமே எடுக்காதபடி ஜீவத்தண்ணீருள்ள நதிகளான பரிசுத்த ஆவியானவரை தன் இருதயத்திலே பெற்றிருந்திருக்கலாம், முழுமையான இரட்சிப்பை பெற்றிருந்திருக்கலாம்.

இனி எக்காலத்திலும் நமக்கு தாகமே (ஆத்மீக தாகம்) எடுக்காதபடி ஜீவத்தண்ணீருள்ள நதிகளான பரிசுத்த ஆவியானவரை இலவசமாக பெற்றிருக்கிற நாம், அந்த சமாரியர் அநேகர் இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து உலகரட்சகர் என்று அறிந்து விசுவாசிக்கிறோம் என்று அறிக்கையிட்டு மனந்திரும்பியதுபோல, தாகந்தீர்க்கப்பட்டதுபோல, நம்மை நெருங்கியிருக்கிற ஆத்மீக தாகத்தோடு அலைந்து கொண்டிருக்கிற அநேகருக்கு இயேசு கிறிஸ்துவை அறிமுகப்படுப்படுத்துவதென்பது நம் கடமை.

எரேமியா 2:13ல் கர்த்தர் சொல்கிறார் இஸ்ரவேல் மக்களைப்பார்த்து ஜீவத்தண்ணீர் ஊற்றாகிய என்னை

*விட்டுவிட்டார்கள்; தண்ணீர் நிற்காத தொட்டிகளாகிய வெடிப்புள்ள தொட்டிகளை தங்களுக்கு வெட்டிக்கொண்டார்கள். ஆதலால் என்ன நடந்தது அவர்களுக்கு? 14-17 ல் எவ்வளவு கஷ்டங்களை அனுமதித்தார்கள்? நாம் இவைகளை எண்ணிப்பார்த்து மிகவும் ஜாக்கிரதையாக ஜீவத்தண்ணீருள்ளநதிகளான பரிசுத்த ஆவியானவரை துக்கப்படுத்தாதிருப்போமாக!*

*அன்புடன்.*
***உங்கள் ஆயர்,***
***Rev. M .Christopher Rajendran.***

---

## ***<u>பெண்கள் ஐக்கிய சங்கம்</u>***

*அன்புக்குரிய தாய்மார்களே!*

*பெண்கள் ஐக்கிய சங்க WhatsApp ஒவ்வொருநாளும் இரவு 9:00 மணி முதல் 5 அல்லது 10 நிமிடம் ஜெபக்குறிப்புக்களை வைத்து ஜெபித்துக்கொண்டிருக்கிறோம். நாங்களும் இந்த ஜெப ஊழியத்தில் பங்குபெறுகிறோம் என்று நினைப்பவர்கள் தயவு செய்து தொடர்பு கொள்ளவும்.*

*அநேக சாட்சிகள் எழும்பி கர்த்தருடைய நாமம் மகிமைப்பட ஒரே மனதோடும், ஒரே ஆவியோடும், வைராக்கியத்தோடும், விசுவாசத்தோடும் ஜெபிப்போமாக!*

*இப்படிக்கு,*
***உங்கள் ஆயரம்மா***
***Angel .C.***

# செயலரிடமிருந்து...

*கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே...*

*நமது மீட்பரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இணையில்லா நாமத்தினாலே உங்கள் யாவருக்கும் சபை குழுவின் சார்பாக அன்பின் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன். உங்களது அனுதின ஜெபம் மாதாந்திர பொருளுதவி, ஊழியத்தின் கரிசனைக்காக தேவனை துதிக்கிறேன். கர்த்தர் மென்மேலும் உங்களையும் உங்கள் குடும்பத்தார் அனைவரரையும் ஆசீர்வதிப்பாராக.*

*இந்த ஆண்டின் எட்டு மாதங்களை கடந்துவர கர்த்தர் நமக்கு உதவி செய்து நம் குடும்பத்த்தையும் பாதுகாத்து வழிநடத்தி நம் கையின் பிரயாசங்களை ஆசிர்வதித்த தேவாதி தேவனை நன்றி நிறைந்த உள்ளதோடு போற்றுவோம். திருச்சபை மக்கள் பலர் தங்கள் விடுமுறை நாட்களில் தங்கள் அன்பான பெற்றோர் குடும்பத்தார் மற்றும் நண்பர்களை கண்டு; சந்தோஷமாய் விடுமுறையை நாட்களை கழிக்க கர்த்தர் கிருபை கூர்ந்தார். மறுபடியும் இந்த தேசத்திலே திரும்பி வரவும் தேவன் நமக்கு தந்த பணியினை புதிய பெலத்தோடு செய்யவும் கிருபையளித்த தேவனை முழுமனதாய் போற்றுவோம்.*

*வரும் அக்டோபர் மாதம் 26ஆம் தேதி நடைபெறவிருக்கும் நமது திருச்சபையின் அறுப்பின் பண்டிகைக்காக மற்றும் ஊழியங்களுக்காக ஊழியர்களுக்காக அனுதினமும் ஜெபியுங்கள். அது உண்மையிலேயே ஆசீர்வாதமாகவும் உன்னதமான பலனாகவும் இருக்கிறது. உங்களுக்காகவும் உங்கள் குடும்பத்துக்காகவும் நாங்கள் ஜெபிக்கிறோம். திருச்சபை மக்கள் இன்னும் அதிக உற்சாகத்தோடு அனைத்து ஆலய ஆராதனைகளில் பங்கு பெற்று தேவாசீர்வாதம் பெற்று செல்ல அன்புடன் அழைக்கிறேன்.*

*தேவ கிருபை உங்கள் அனைவரோடும் எப்போதும் இருப்பதாக..*

*இப்படிக்கு*
*கிறிஸ்துவின் பணியில் உங்கள் சகோதரன்*
***S. சுரேஷ் ராஜன்***

# மிஷனரி பணித்தளச்செய்திகள்

**From Our Missionaries**

*நமது DMPB மிஷனரிகளிடமிருந்து…*

*மே-ஜுன் மாத அருட்பணிகள் ஆசிர்வாதமாய் நடைபெற உதவிசெய்த கர்த்தருக்கு நன்றிப்பலிகளை ஏறெடுப்போம்.*

| **மிஷனரி பெயர்** | திரு. சூரிபால் சதா | திரு. கிறிஸ்டோபர் |
|---|---|---|
| **பணித்தளம்** | நீலமங்கலம் , கள்ளக்குறிச்சி-மாத்துர் | மேல்முத்தானூர்-குருகிலாமூர் |
| **இறைமக்கள் சந்திப்பு – விபரம் / மாதம்** | *மே-2018* | *ஜுன்-2018* |
| **விசுவாச குடும்பங்கள்** | *09* | *29* |
| **விசுவாசிகள் அல்லாத குடும்பங்கள்** | *11* | *50* |
| **சந்தித்த நோயாளிகள்** | *09* | *60* |
| **சிறப்பு நிகழ்வுகள்** | *02* | *0* |

*நமது திருச்சபையின் முலமாக அனுப்பப்பட்ட மிஷனரிகளுக்காக அனுதினமும் ஜெபியுங்கள். இறைவழி விலகி சிறைவாள் மக்களுக்கு அவர்கள் குறைபோக்கி நிறைவாழ்வு தரும் கிறிஸ்துவின் அன்பைப் பறைசாற்றி உன்னதருடன் ஓர் உயரிய உறவை ஏற்படச்செய்யும் உணர்வான பணி; நாம் இணைந்து செய்யும் இப்பணி மூலம் நல்ல அறுவடை கிடைக்க கடவுளிடம் மன்றாடுவோம்.*

*நமது மிஷனரிகள் ஏறெடுக்கிற எல்லா முயற்ச்சிகளுக்காகவும் துனை நின்று ஊக்கமாய் ஜெபிப்போம். வரும் மாதங்களில் பணித்தள சாட்சிகள் மற்றும் ஜெப விண்ணப்பங்கள் பற்றிய சிறிய அறிக்கை நமது மன்னா புத்தகத்தில் இடம்பெற முயற்ச்சிகள் எடுக்கபடும்.*

# <u>திட்டங்கள்</u>
# Projects

### *Project for the Congregation.*
*மத்தேயு 13: 18-23ஐ தியானித்து ஒரு பக்க அளவில் கட்டுரை வரைக. சிறந்த கட்டுரை தேர்வு செய்து மன்னாவில் வெளியிடப்படும்.*

### *Project for Children Bible School.*
*Draw pictures based on Luke 5:1-11...Give proper title for this passage.*

### *Project for Youth group.*
*லுக்கா 5: 1-11ஐ தியானித்து ஒரு பக்க அளவில் கட்டுரை வரைக. சிறந்த கட்டுரை தேர்வு செய்து மன்னாவில் வெளியிடப்படும்.*

### *Project for Women's Fellowship.*
*திருவிருந்தைப்பற்றி விவாதிக்கப்படும்.*

### *Project for Men's Fellowship.*
*திருவிருந்தைப்பற்றி விவாதிக்கப்படும்.*

❝தன்னுடைய பாவத்தைப்பற்றி ஆழமாக அறிந்து உணர்ந்தவனே வேதபூர்வமான கிறிஸ்தவன். தமது பாவத்தின் கோரத்தின் சுமையை எல்லோரும் ஒரேவிதத்தில் உணர்வதில்லை. அது ஆளுக்கு ஆள் வித்தியாசமானதாக இருக்கும். அதை ஒருவர் அனுபவபூர்வமாக உணர்ந்து கவலை கொள்ளும் கால அளவும் ஆளுக்கு ஆள் வேறுபடும். இவ்வனுபவங்கள் ஆளுக்கு ஆள் வேறுபட்டபோதும் மாபெரும் வைத்தியரான இயேசு கிறிஸ்து, தன்னைப் பாவியாகக் கண்டுணராத எந்த ஒரு மனிதனையும் இரட்சிப்பதில்லை. "நீதிமான்களையல்ல, பாவிகளையே மனந்திரும்புகிறதற்கு அழைக்க வந்தேன்" (மத்தேயு 9:13) என்று இயேசு கூறியுள்ளார். நீங்கள் தனிப்பட்டவிதத்தில் உங்களைப் பாவி என்று வாழ்க்கையில் ஆழமாக உணர்ந்த வேதபூர்வமான கிறிஸ்தவரா?❞

## <u>***கட்டுரைகள்***</u>

## ARTICLES

# "நல்ல நிலத்தில் விதைக்கப்பட்ட விதை"

**யேசு கிறிஸ்து** விதைக்கிறவன் ஒருவன் நிலத்தில் விதை விதைக்க சென்றது பற்றி உவமையாக சொன்னார். இந்த விதைகள் நான்கு விதமான நிலத்தில் விழுந்தன, முதலாவது, சில விதைகள் வழியருகே விழுந்தன. அந்த நிலம் கடினமாக இருந்தாலும் வழியிலே நடந்து சென்றவர்களின் காலடிகள் பட்ட படியினாலும் அவ்விதைகள் நிலத்தினுள் செல்லவே இல்லை. எனவே ஆகாயத்து பறவைகள் வந்து அவற்றை தின்று விட்டன, அதனால் அந்த விதைகள் எந்த பலனையும் கொடுக்கவில்லை.

இரண்டாவது, சில விதைகள் கற்பாறையான நிலத்தில் விழுந்தன, அவைகள் முளைத்து வேர்கள் கற்பாறையை தொடும் வரை வளர்ந்தன. ஆனால் வேர்கள் அதற்கு மேல் வளர முடியவில்லை. சூரிய வெப்பம் தாக்கியவுடனே அவைகள் காய்ந்து போயின. இந்த விதைகளும் எந்த பலனையும் தரவில்லை. மூன்றாவதாக, சில விதைகள் முட்கள் உள்ள நிலத்தில் விழுந்தன, விதைகள் முளைத்து செடிகள் வளர்ந்தன. முட்செடிகளும் கூடவே வளர்ந்து அவற்றை நெருக்கிப் போட்டன. இந்த விதைகளும் எந்த பலனையும் தரவில்லை. நல்ல நிலத்தில் விழுந்த விதைகள் மாத்திரம் பலன் கொடுத்ததாக இயேசு கூறுகிறார். மேலும், மத்தேயு 13:23 ல் இயேசு கிறிஸ்து இப்படியாக சொல்கிறார், நல்ல நிலத்தில் விதைக்கப் பட்டவனோ, வசனத்தைக் கேட்கிறவனும் உணருகிறவனுமாயிருந்து, நூறாகவும் அறுபதாகவும் முப்பதாகவும் பலன் தருவான் என்றார்.

இயேசு கிறிஸ்து இரண்டு காரியங்களை சொல்கிறார் முதலாவது வார்த்தைகளை கவனிக்கிறான். இரண்டாவதாக அதை புரிந்து கொள்கிறான். நல்ல நிலத்தை போல் இருப்பவர்கள் வாழ்க்கையில் இது உண்மையாக இருக்கிறது. மேலும் அவர்கள் எல்லாரும் நல்ல பயிரை விளைவித்தாலும் அவர்கள் கொடுக்கும் பலனில் வித்தியாசம் உள்ளது. சிலர் நூறு மடங்கும் சிலர் அறுபது மடங்கும் சிலர் முப்பது மடங்கும் விதைத்ததில் பலனை தருகிறார்கள். அதாவது விதைக்கப்பட்ட ஒவ்வொரு விதையிலும் சிலர் நூறு விதைகளும், சிலர் அறுபது விதைகளும், சிலர் முப்பது விதைகளும் உற்பத்தி செய்கின்றனர்.

**தேவனி**டத்திலிருந்து மிக சிறந்ததை பெற்று கொள்ள விரும்புகிறவர்கள் நூறு மடங்கு பலனை கொடுப்பவர்களாயிருப்பார்கள். நூறு மடங்கு பலனானது அறுபது மற்றும் முப்பது மடங்கு ஆகிய இரண்டு பலன்களின் கூட்டு தொகையை விட அதிகமாகும்.

லூக்கா 8:15 **"**நல்ல நிலத்தில் விதைக்கப்பட்டவர்கள் வசனத்தைக்கேட்டு, அதை உண்மையும் நன்மையுமான இருதயத்திலே காத்துப் பொறுமையுடனே பலன் கொடுக்கிறவர்களாயிருக்கிறார்கள்.**"**

**இ**ந்த பகுதியிலே இரு முக்கிய காரியங்கள் உள்ளன. அவைகள் இரண்டும் தேவனுடைய சிறந்ததை விரும்பும் படியாக இருக்கின்றன. முதலாவது உண்மையும் நன்மையுமான இருதயம். (சரியான மொழி பெயர்ப்பின்படி நேர்மை). நேர்மை என்பது வெளிப்படையான காரியம், உண்மை இரண்டையும் உள்ளடக்கியது. இத்தகைய நேர்மையான மக்கள் வசனத்தை கேட்கிறார்கள். அதை இருதயத்தில் காத்து கொள்கிறார்கள் பொறுமையுடன் பலன் கொடுக்கிறார்கள். நூறு மடங்கு பலன் கொடுக்க இந்த மூன்று காரியங்களும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவைகளாகும்.

**நா**ம் எந்த அளவு பலன் தர விரும்புகிறோம்? முப்பது மடங்கோடு திருப்தி அடைந்து விடுகிறோமா? அறுபது மடங்கு பலனை தர விரும்புகிறோமா? அல்லது நூறு மடங்கு பலனை பெற வாஞ்சிக்கிறோமா? நாம என்ன பெற்று கொள்ள போகிறோம் என்பது நம் இருதயத்தின் செயல்பாட்டை பொறத்தே அமையும். தேவனோடு உள்ள நமது உறவு இரு பக்கங்களை கொண்டது. ஒரு பக்கம் தேவன் நமக்காக வைத்துள்ள காரியங்களும், மறுபக்கம் தேவன் நமக்காக வைத்துள்ள காரியங்களுக்கான நமது செயல்பாடும் அமைந்துள்ளன. நாம் நமது இருதயங்களை நேர்மையாக மாற்றும் போது நூறு மடங்கு பலனை பெற்று கொள்ள முடியும்.

**"யூதா** மனுஷரோடும், எருசலேமியரோடும் கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: " நீங்கள் முள்ளுகளுக்குள்ளே விதையாதிருங்கள், உங்கள் தரிசு நிலத்தைப் பண்படுத்துங்கள்." ஏரேமியா 4:3 ல் உங்கள் தரிசு நிலத்தை பண்படுத்துங்கள் என்று தேவன் சொல்கிறார். இன்று பலருடைய இருதயங்கள் தரிசு நிலங்களாகவே இருக்கிறது. ஜீவ நதியாகிய பரிசுத்தாவியானவர் ஊற்றப்படவில்லை. யோவான் 7:38 ல் இயேசு கிறிஸ்து **"**வேதவாக்கியம் சொல்லுகிற படி என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும்" என்றார். தன்னிடத்தில் விசுவாச மாயிருக்கிறவனின் இருதயத்தில் இருந்து ஜீவ தண்ணீருள்ள நதிகள் (பரிசுத்தாவியானவர்) ஒடும் என்றார். **"**உங்களுக்கு நவமான இருதயத்தைக் கொடுத்து, உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியைக் கட்டளையிட்டு, கல்லான இருதயத்தை உங்கள் மாம்சத்திலிருந்து எடுத்துப் போட்டு, சதையான இருதயத்தை உங்களுக்குக் கொடுப்பேன்.**"** -எசேக்கியேல் 36:24.

**அ**டுத்ததாக தரிசு நிலம் எதை குறிக்கிறது என்றால் தேவனை விட்டு விலகுவதற் கேதுவான அவிசுவாசமுள்ள பொல்லாத இருதயம் (எபிரெயர் 3:12). இதில் இரண்டு காரியங்கள் சொல்லப்படுகிறது. அவிசுவாசமான இருதயம், பொல்லாத இருதயம். விசுவாசமில்லாமல்

தேவனுக்கு பிரியமாயிருப்பது கூடாத காரியம் என்று வேதம் சொல்கிறது. இத்தகைய இருதயமுள்ளவர்கள் மத்தேயு 15:8 ல் **"**இந்த ஜனங்கள் தங்கள் வாயினால் என்னிடத்தில சேர்ந்து தங்கள் உதடுகளினால் என்னைக் கனம் பண்ணுகிறார்கள், அவர்கள் இருதயமோ எனக்குத் தூரமாய் விலகியிருக்கிறது" என்று சொல்லப்பட்டது போல உதடுகளினால் தேவனை கனம் பண்ணுகிறார்கள். மேலும் அவர்கள் உலகத்தையும் தங்கள் பாரம்பரியத்தையம் நேசிப்பதால் அவர்கள் இருதயம் வேனை விட்டு தூரமாய் விலகி இருக்கிறது.

அடுத்து பொல்லாத இருதயம் என்பது வேதாகமத்தில் சொல்லப்பட்ட திருக்குள்ளதும் கேடுள்ளதுமான இருதயம். இத்தகைய இருதயத்தில் கலாத்தியர் 5:19-20 ல் சொல்லப்பட்ட மாம்சத்தின் கிரியைகள் நிறைந்து காணப்படுகின்றன. இத்தகைய நேர்மையற்ற தரிசு நிலமான இருதயம் ஒரு மடங்கு பலனை கூட கொடுக்க முடியாது.

**ஆ**னால் நேர்மையான இருதயத்தின் செயல்பாடு நல்ல பலனை கொடுக்கும். நூம் நல்ல கனி கொடுக்க வேண்டும் என்பதே தேவனுடைய வாஞ்சை. லூக்கா 8:15 ல் முதலாவது நம் இருதயம் நேர்மையான இருதயமாக இருக்க வேண்டும். தேவனுடைய வார்த்தையை கேட்க வேண்டும் அடுத்து அதை இருதயத்தில் காத்து கொள்ள வேண்டும். அடுத்து நாம் செய்யும் காரியத்தில் பொறுமையுடன் பலன் கொடுக்க வேண்டும். யோவான் 4:36ல் இயேசு கிறிஸ்து இப்படியாக சொல்கிறார்.

**"விதைக்கிறவனும் அறுக்கிறவனுமாகிய இருவரும் ஒருமித்துச் சந்தோஷப் படத்தக்கதாக, அறுக்கிறவன் கூலியை வாங்கி, நித்திய ஜீவனுக்காகப் பலனைச் சேர்த்துக் கொள்ளுகிறான்."**

\- *M.Nesamony*

**நீ யார் என்பது தேவன் தந்த பரிசு....**

**நீ யாராக வாழ்கிறாய் என்பது**

**நீ அவருக்கு தரும் பரிசு...!!!**

# ஞானத்தால் விடுதலை

**ராஜாவின் கோபம் மரண தூதருக்கு சமானம்**
**ஞானமுள்ளவனோ இதை ஆற்றுவான்.. (நீதி16:14)**

இங்கிலாந்து மன்னரின் தங்க கிரீடத்தை திருடி புகள் பெற்றவர் ஐரீஸ் நட்டை சேர்ந்த தாமஸ்பிளட் என்பவர்.

இங்கிலாந்து உள்நாட்டுப்போரில் அரசுக்கு ஆதரவாக செயல்பட்டதற்க்காக பண்ணைவீட்டை அரசு இவருக்கு பதிலளித்தது. 1160- ல் இரண்டாம் சார்லஸ் மன்னர் ஆனார். பண்ணை வீட்டை பற்றிக் கொண்டார்.

இதற்க்காக மன்னருக்கு எதிரியான பிளட், அரண்மனைக்குள் தந்திரமாக நுளைந்து, கிரீடத்தை திருடினார். வெளியேறும் போது காவலர்களிம் சிக்கி கொண்டார்.

கிரீடத்த திருடியது திருடுவதற்க்காக அல்ல, அரசை சந்திக்கும் சந்தற்ப்பத்தை உருவாக்கவே என்று பிளட் புத்திசாலித்தனமாக சொல்லிக் கொண்டார்.

கொடிய குற்றத்தின் கூரை தனது ஞானத்தால் மழுங்க செய்த பிளட்டீன் பதில் அரண்மனைக்கு அதிர்ச்சியாய் இருந்தது. மன்னர் அவரை சந்தித்து அவரை மன்னித்ததோடு பண்ணை வீட்டையும் அரசு பணியையும் கொடுத்து சிறப்பித்தது.

அன்பானவர்களே! நாமும் ஞானமாய் பேச பழக கற்றுக் கொள்ளுவோம்.

**நெல்சன் சோபித ராஜ்.**

**பின்வாங்கிப் போகுதல் பொதுவாகவே ஜெபத்தை அலட்சியப்படுத்துவதில் இருந்து ஆரம்பிக்கிறது.** - ஜெ. சி. ரைல்

## ***சிறுவர் பகுதி Children's Place***

## "JOE AND MATT"

Joe and his only son Matt loved to camp and fish and hunt. They usually set aside a couple fall or early winter days for the outing. This time, they were out just a week before Thanksgiving. Usually when they hunted, they didn't care if they shot a bird or just took pictures of one. But they brought guns because there were bears and large cats in this area of the country.

The first night, Matt hit his sleeping bag early and Joe was enjoying a quite fire in the cool of the evening when he felt God speaking to him. "God?" Joe said to the inner voice that was guiding him with very specific instructions. "I am listening." He whispered. "Take Matt to the top of the mountain tomorrow." He felt the spirit was saying. "There you will use your gun you will offer him to me to be the special kill that will be used to honor the Lord your God this Thanksgiving Day."

What an odd instruction. How could God ask him to kill his own son, a son that God gave him after many prayers and one that God had promised to make into a mighty servant of the kingdom of God? Should he argue with God? No. Somehow, despite a very confused mind, he knew that obedience was the right thing to do.

In the morning, they broke camp and Joe told Matt about his prayer time. "God wants us to go to the top of the mountain where we will kill a very special prize to be used for our Thanksgiving meal this year." Said Joe. "God said that Dad?" Matt said sceptically. But Matt trusted God and trusted his dad with everything so finally he said. "Ok, if that what God wants, that is what we will do."

They hiked along quietly with Matt in the lead. As Joe cradled his gun, he knew it would be so hard to turn his gun on his son who he loved more than even his own life. Finally, they got to the top of the mountain and Matt crossed the clearing. "Ok Pop, did God have any specifics about where this special prize was or what it would be? Is it a turkey or a boar or something else? You know mom doesn't like surprises." Then Matt turned back toward his dad and froze. There directly

opposite was Joe holding his rifle to his face and pointing it directly at him.

Still Matt did not believe that his dad was going to kill him. His mind raced. Joe loved him more than any human in the world and Matt knew that God loved him too and had a wonderful future for him. So why was his dad pointing that gun at him? “Uh dad? Is the kill behind me because you know, I don’t mind ducking.” “God will provide the kill.” Joe said solemnly and he brought back the hammer of the gun. Matt’s head was directly in his sights. As he began to squeeze the trigger, a powerful anointing from inside his heart surged up from his spirit.

“To the left!” the Holy Spirit said and without a moment’s hesitation, Joe turned the gun to the left and fired. The recoil of the gun knocked the old man down. He was afraid to get up but he knew God was in control. When he sat up, there stood Matt with a huge turkey in his arms killed with one precision shot from Joe’s rifle.

“That was some shot dad. I didn’t even see you aim. For a minute I thought that gun was pointed at me and I was all, you know dad, I can clean my room better, no need to get so dramatic but then you fired and….” Matt’s happy voice continued on but Joe just bowed his head and thanked God for honoring his obedience. Matt did go on to a great career, a ministry that brought salvation to many. In their old age, Joe finally told his wife about the hunting trip. Before she could get upset he told her the lesson he had finally come to from that amazing outing.

“God honored my obedience and the obedience of Matt. Since then I have walked with God as a friend. But friendship with God is always grounded in obedience.” He said.

**“By faith Abraham, when God tested him, offered Isaac as a sacrifice. He who had received the promises was about to sacrifice his one and only son, even though God had said to him, “It is through Isaac that your offspring will be reckoned.” Abraham reasoned that God could raise the dead, and figuratively speaking, he did receive Isaac back from death. [Hebrews 11:17-19]”**

**-Diniya Sunshine**

## ***<u>Children's Quiz</u>***

# The Gospel According To Acts Chapters 01 & 10

1. Before he was taken up to heaven, to whom did Jesus give instructions?
   (a) John (b) The apostles (c) Peter (d) Mark

2. Jesus was from which town?
   (a) Nazareth (b) Galilee (c) Samaria (d) Jericho

3. Who are the two apostles went to temple at ninth hour?
   (a) John and Jacob (c) Peter and Thomas
   (b) Peter and John (d) None of the above

4. To what town was Cornelius to send men?
   (a) Joppa (b) Cyprus (c) Galatia (d) Phonenicia

5. What happened to Saul while he was on his way to Damascus?
   (a) He was taken captive by the Christians at Damascus.
   (b) He was struck dead by bolt of lightning.
   (c) God appeared to him in the form of burning bush.
   (d) A light from heaven flashed around him, and he fell to the ground.

6. One-day Peter had a vision of something like a large sheet being let down to earth by its four corners. What was in the sheet
   (a) The Ark of covenant.
   (b) A beast having ten horns and seven heads.
   (c) All kinds of four-footed creatures and reptiles and birds.
   (d) A beast having four wings and four tails.

7. What was not about the disciple Tabitha, when she was mentioned in Acts?

(a) She was raised from the Dead
(b) Her name is translated as Dorcas.
(c) She was Peter's sister-in-law.
(d) She did a lot of charitable work.

8. What sin did Ananias and sapphire commit?
(a) Stole from the communal treasury.
(b) Lied to the Holy Spirit.
(c) Persecuted Christians
(d) Failed to pay taxes

9. Stephen says that the knowledge of what life or death event caused Moses to flee from Egypt?
(a) Moses killed an Egyptian who was mistreating and Israelite
(b) Moses was almost beaten to death by Pharaoh Ramses
(c) Moses killed an Israelite slave who was disobeying an Egyptian.
(d) Moses heard God from a burning bush telling him to leave Egypt.

10. What did members of the early church in Jerusalem do with their Money?
(a) They laid it at the feet of the Apostles.
(b) They invested it on behalf of the church.
(c) They gave it to the temple.
(d) None of the above

**Note:** Please send your answers to church email/WhatsApp with the subject "**Your Name/Childrens Quiz/Sep18**"

**Sample: Annlin/Childrens Quiz/Sep18**

## ***Children's Quiz Correct Answers:***

**JULY – AUGUST 2018**

1. (c) Lazarus (12:10,11),
2. (d) All of above
3. (c) Lay down his life (15:13)
4. (d) They would love one another. (13:35)
5. (a) Except it fall in the ground and die it abides alone.
6. (d) None of the above.
7. (d) Malcus (18:10)
8. (a) "Father, forgive them, for they do not know what they do"
9. (a) Keep His commandments (14:15)
10. (a) Do you love me more than these? (21: 15-17)

## Children who wrote the Correct answers & Coloring:

- ✓ *Annlin Sophia Nelson*
- ✓ *Angelin Sophia Nelson*
- ✓ *Dennis Roger*
- ✓ *Dinya Sunshine*
- ✓ *Easterine Benedicta Raj*
- ✓ *Earline Bernice Raj*
- ✓ *Eric Jayden Jason*
- ✓ *Gain George Rose*
- ✓ *Geovin George Rose*
- ✓ *Jesvin Selvakumar*
- ✓ *Joshika Vashni*
- ✓ *Joshuva K*
- ✓ *Jonathan Asher*
- ✓ *Jeremiah Alan*
- ✓ *Jemima Ashni*
- ✓ *Roshan Ravindra*
- ✓ *Shelbino Paul*
- ✓ *Johan sanjo*

# Congrats!!

# You have done a wonderful job!!

# Bible Wordsearch

## The Rich Man & The Kingdom

Wordsearch 276 Matt 19:15-30

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| R | L | G | R | A | E | C | B | T | I | R | E | H | N | I |
| E | E | N | T | R | Y | R | H | N | E | V | A | E | H | O |
| N | A | H | U | J | O | M | U | I | R | R | D | S | E | L |
| E | R | T | T | T | U | N | O | S | L | R | E | V | R | A |
| W | S | E | H | A | P | D | O | T | A | D | I | T | N | N |
| A | I | E | L | I | F | E | G | H | H | E | R | G | N | R |
| L | R | T | L | T | H | R | T | I | C | E | R | E | T | E |
| S | P | E | R | F | E | C | T | E | N | A | R | T | N | T |
| O | F | U | Y | H | L | N | R | O | R | G | M | U | W | E |
| T | T | S | C | F | B | N | O | S | I | S | T | E | R | S |
| H | K | A | S | O | I | E | R | R | S | S | A | E | L | U |
| R | E | V | D | L | S | E | V | E | H | L | E | K | A | S |
| T | P | E | N | L | S | D | L | A | T | T | G | I | V | E |
| N | T | D | A | O | O | L | T | H | T | I | M | E | S | J |
| R | I | C | H | W | P | E | S | U | O | I | R | O | L | G |

| | |
|---|---|
| CAMEL | BROTHERS |
| ENTER | CHILDREN |
| GIVE | ETERNAL |
| HANDS | FATHER |
| HARD | FOLLOW |
| HONOR | GLORIOUS |
| INHERIT | HEAVEN |
| ISRAEL | JUDGING |
| JESUS | MOTHER |
| KEPT | NEEDLE |
| LEFT | PERFECT |
| LIFE | POSSIBLE |
| PETER | RECEIVE |
| RICH | RENEWAL |
| SAKE | SISTERS |
| SAVED | TEACHER |
| SELL | THRONE |
| TIMES | TREASURE |
| TRUTH | WEALTH |


After you find all the hidden words the left over letters spell out a Bible verse reading from the top left to the bottom right

_ _ _ _ _ _   _ _ _ _ _   _ _ _ _ _ _ _ _ _ _ _
_ _   _ _ _ _ _   _ _ _ _ _ _ _ _ _



**Dear Children…**

**Put God FIRST and you'll NEVER be last.**




You, therefore, have no excuse, you who pass judgment on someone else, for at whatever point you judge another, you are condemning yourself, because you who pass judgment do the same things.
– Romans 2:1 NIV

## Kids Coloring...






# David & Goliath

# வேத வினா விடை போட்டி – செப்டம்பர்-2018
## ஏசாயா 31 முதல் 40

1. கர்த்தருடைய பட்டயம் எதினால் திருப்தியாகி எதினால் பூரிக்கின்றது?
2. யார் சத்தியத்தை தியானிப்பதில்லை?
3. ஆசாரியரின் பாளயத்தில் கர்த்தருடைய தூதன் எத்தனைப் பேரை சங்கரித்தான்?
4. நிதியின் கிரியை எது?
5. எசேக்கியா ராஜாவினிடத்தில் நிரூபங்களையும் வெகுமதிகளையும் அனுப்பினது யார்?
6. கர்த்தர் சியோனை எப்படி நிரப்புகிறார்?
7. கர்த்தர் எப்படி எருசலேமின்மேல் ஆதரவாக இருப்பார்?
8. பரிசுத்த வழியிலே யார் நடந்துவருவதில்லை?
9. யார் நடந்தாலும் சோர்ந்துபோகார்கள்?
10. யூதாவிலிருக்கிற அரணான சகல பட்டணங்களுக்கும் விரோதமாய் வந்தது யார்?

**குறிப்பு**: விடைகளுக்குரிய அதிகாரமும் வசனமும் குறிப்பிட்டு இம்மாதம் 20ம் தேதிக்கு முன் *Email* அல்லது *WhatsApp* மூலமாக கீழ்கண்ட தலைப்பில் அனுப்பி வைக்கவும்.

*Your name / Bible Quiz/ Month-Year*

***Sample: Suresh / Bible Quiz / Sep-18***

## கடந்த மாதத்திற்கான விடைகள்

1.கடூரமும், மூர்க்கமும், உக்கிர்கோபமுமாய் வருகிறது (ஏசா 13:9)
2.பாபிலோன் ராஜா (ஏசா 14:4, 19)
3.கர்த்தரின் சுவாசம் (ஏசா 30:33)
4.அரியேல் (ஏசா 29:1)
5.இல்க்கியாவின் குமாரனாகியா எலியாக்கீம் (ஏசா 22:20, 23)
6.சேனைகளின் கர்த்தர் சீயோனை மலையிலும் எருசலேமிலும் ஆளுகை செய்வதால் (ஏசா 24:23)
7.மோவாப் (ஏசா 15:5)
8.ஒலிவமரம் (ஏசா 17:6)
9.சீயோனிலே (ஏசா 28:16)
10.திதானியராகிய பயணக்கூட்டங்களே (ஏசா 21:13)

## கடந்த மாதத்திற்கான விடைகள் எழுதியவர்கள்

ஜூலை –ஆகஸ்ட் -2018

1. திருமதி.ஜெயின் ராஜவேல்.
2. திருமதி.பிப்லின் நெல்சன்.
3. திருமதி. அனிதா ஜார்ஜ்.
4. திரு.ஜார்ஜ் ரோஸ்.
5. திருமதி.அகஸ்டா லாரன்ஸ்.
6. திருமதி.ஹெப்சிபாய் நேசமணி.
7. திருமதி.அனிதா சுரேஷ்.
8. திருமதி.பெட்ரீஷியா ஜேசன்.
9. திரு. ஜேசன் சாமுவேல்.
10. திருமதி.ஜோனிஷ் ஹெர்சில்.
11. திருமதி.ஷாலினி விமலா.
12. திருமதி.ஜெயந்தா ஜாண்.
13. திருமதி.எபென் A . பிரசாத்.
14. திருமதி.ரதிகா செல்வகுமார்.

## பிறந்த நாள் மற்றும் திருமண நாள் ஆசரிப்போர்

(Birthday & Wedding Anniversary Celebrants)

பிறந்த நாள் ஆசரிப்போர் / ***Birthday Celebrants***

| *Date* | *Name* | *Contact* |
|---|---|---|
| 02-Sep | Mrs. Safeena Joel Renjith Kumar | 566361774 |
| 04-Sep | Mr. S. Celin Jose | 557905909 |
| 08-Sep | Ms. Divya Dharshini | 504491769 |
| 09-Sep | Ms. Abighail Davidraj | 508328013 |
| 09-Sep | Mr. Vinith J.Samuel | 565473323 |
| 10-Sep | Mrs. Shiby Angel Sunith Samuel | 565473326 |
| 10-Sep | Mrs. R. Muneeswari | 566411363 |
| 11-Sep | Master P. Kevin Shalom | 505736697 |
| 11-Sep | Ms. Jemima Ashni | 505868173 |
| 17-Sep | Mr. Nelson Sopitha Raj | 556028865 |
| 21-Sep | Mr. S. Jesvin Bose | 502334421 |
| 27-Sep | Ms. Pragathi | 566411363 |

***Wishing you a birthday filled with God's Blessings, Thanking God for the gift of your Faith-Filled life and Praying that the Holy Spirit will strengthen you as you serve the Church...***

*Happy Birthday...*

## திருமணநாள் ஆசரிப்போர்/Wedding Anniversary

| Date | Name | Contact |
|---|---|---|
| 07th Sep | Mr. Suresh Rajan<br>Mrs. Anitha Suresh Rajan | 050 586 8173 |
| 08th Sep | Mr. Anthony<br>Mrs. Esther Anthony | 055 701 1315 |
| 16th Sep | Mr. D. Rajavel<br>Mrs. Jein Arputhakani Rajavel | 050 449 1769 |

# Happy Wedding Anniversary

**இந்த மாதத்தில் பிறந்த நாளையும் திருமண நிறைவு நாளையும் காணும் அனைவருக்கும் திருச்சபையின் சார்பில் அன்பின் வாழ்த்துக்களைக் கூறிக்கொள்கிறோம்**

---

# ஊக்கமாய் ஜெபிப்போம்...




**நமது ஆண்டை மாநிலமான கேரளா கடும் மழை மற்றும் வெள்ளப்பெறுகினால் பாதிக்கப்பட்டிருப்பதை நாம் அறிவோம். தெய்வ சமூகத்தில் இதற்காய் கண்ணீரோடு ஊக்கமாய் ஜெபிப்போம்.**

# தினசரி வேதவாசிப்பு

## Daily Bible Reading – Sep-2018

கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான். (சங்.1:2)

| Date | Day | Morning | Evening |
|---|---|---|---|
| 1-Sep | Sat | 1 Corinth 6 | 1 Samuel 25 |
| 2-Sep | Sun | 1 Corinth 7 | 1 Samuel 26 |
| 3 | Mon | 1 Corinth 8 | 1 Samuel 27 |
| 4 | Tue | 1 Corinth 9 | 1 Samuel 28 |
| 5 | Wed | 1 Corinth 10 | 1 Samuel 29 - 30 |
| 6 | Thu | 1 Corinth 11 | 1 Samuel 31 |
| 7 | Fri | 1 Corinth 12 | 2 Samuel 1 |
| 8 | Sat | 1 Corinth 13 | 2 Samuel 2 |
| 9 | Sun | 1 Corinth 14 | 2 Samuel 3 |
| 10 | Mon | 1 Corinth 15 | 2 Samuel 4 - 5 |
| 11 | Tue | 1 Corinth 16 | 2 Samuel 6 |
| 12 | Wed | 2 Corinth 1 | 2 Samuel 7 |
| 13 | Thu | 2 Corinth 2 | 2 Samuel 8 - 9 |
| 14 | Fri | 2 Corinth 3 | 2 Samuel 10 |
| 15 | Sat | 2 Corinth 4 | 2 Samuel 11 |
| 16 | Sun | 2 Corinth 5 | 2 Samuel 12 |
| 17 | Mon | 2 Corinth 6 | 2 Samuel 13 |
| 18 | Tue | 2 Corinth 7 | 2 Samuel 14 |
| 19 | Wed | 2 Corinth 8 | 2 Samuel 15 |
| 20 | Thu | 2 Corinth 9 | 2 Samuel 16 |
| 21 | Fri | 2 Corinth 10 | 2 Samuel 17 |
| 22 | Sat | 2 Corinth 11 | 2 Samuel 18 |
| 23 | Sun | 2 Corinth 12 | 2 Samuel 19 |
| 24 | Mon | 2 Corinth 13 | 2 Samuel 20 |
| 25 | Tue | Galatians 1 | 2 Samuel 21 |
| 26 | Wed | Galatians 2 | 2 Samuel 22 |
| 27 | Thu | Galatians 3 | 2 Samuel 23 |
| 28 | Fri | Galatians 4 | 2 Samuel 24 |
| 29 | Sat | Galatians 5 | 1 Kings 1 |
| 30 | Sun | Galatians 6 | 1 Kings 2 |

## திருசபை ஆராதனை நேரம்
## Our Church Worship Timings

**மெயின் ஒர்ஷிப் ஹால் - ஓயாசிஸ் ஆஸ்பித்திரி வளாகம், அல்-அய்ன்**
**Main Worship Hall – Owasis Hospital Campus, Al-Ain, UAE**

| | | |
|---|---|---|
| First & Third Fridays | 7:00 PM | Communion Service |
| First & Third Fridays | 6:30 PM | Men's Prayer |
| Second & Fourth Fridays | 7:00 PM | Regular Service |
| Second & Fourth Fridays | 6:30 PM | Bible Study |
| Every Friday | 6:15 PM | Children's Bible School |

**ஆயர் இல்லத்தில் நடைபெறும் ஊழியங்கள் - ஜாஹலி**
**Regular Ministries at Parsonage- Jahli**

| | | |
|---|---|---|
| First Friday | 11:00AM | Fasting Prayer |
| Every Wednesday | 7:30 PM | Bible Study |
| Second & Fourth Saturday | 7:00 PM | Gospel Ministry |
| Third Saturday | 7:30 PM | Women's Prayer |
| Last Day of Every Month | 11:30PM | Month End & Beginning Prayer |

***நமது திருச்சயின் 2018 ஆண்டிற்கான அறுப்பின் ஸ்தோத்திர பண்டிகை வரும் 26/10/2018 அன்று மாலை 4:00 மணிக்கு நடைப்பெறும்***
சபைமக்கள் இதற்க்காக தினமும்
**ஜெபியுங்கள்...**